<u>தமிழ்நாடு அரசு</u>

எழுதபொருள் (ம) அச்சுத்துறை இயக்ககம், 110, அண்ணா சாலை, சென்னை–2. அரசு மைய அச்சகம் (ம) அரசு கிளை அச்சகம், சென்னை (ம) வெளியூர் கிளை அச்சகங்களின் தொழில்நுட்ப பதவிகளுக்கு பணியாளர்களைத் தேர்வுசெய்தல்.

இயக்கக எண்.பி2/15737/2014 நாள்: 30.12.2015.

| | |
|---|---|
| பார்வை: | இயக்கக அறிவிப்பு எண்.பி2/15737/2014, நாள்: 01.04.2015. |

-----

எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையில் இயந்திர இயக்கி, இளநிலை புத்தகம் கட்டுநர், இளநிலை கம்மியர், இளநிலை மின்வினைஞர், உதவி வெப்ஆப்செட் டெக்னீஷியன், ஆப்செட் மெஷின் டெக்னீஷியன் மற்றும் உதவி ஆப்செட் மெஷின் டெக்னீஷியன் ஆகிய தொழில்நுட்பம்சார்ந்த பணியிடங்களுக்கு 01.04.2015 நாளிட்ட செய்தித்தாள் அறிவிப்பின் அடிப்படையில் ஏற்கனவே விண்ணப்பித்துள்ள நபர்களுக்கும், இப்பணியிடங்களுக்கு வேலைவாய்ப்பு அலுவலகங்களினால் பரிந்துரை செய்யப்பட்டுள்ள நபர்களுக்கும், தொலைபேசி இயக்குபவர் பதவிக்கு விண்ணப்பித்துள்ள நபர்களில் உரிய தொழில்நுட்பத் தகுதி பெற்றுள்ள நபர்களுக்கும், சென்னையில் 09.01.2016 அன்று காலை 10.00மணி முதல் பிற்பகல் 1.00மணி வரை எழுத்துத்தேர்வு நடத்திட திட்டமிடப்பட்டு, தேர்வுக்கான நுழைவுச்சீட்டுகள் அனுப்பப்பட்டுள்ளன.

இத்தேர்வு தொடர்பாக பின்வரும் விவரங்கள் தெரிவிக்கப்படுகின்றன.

- எழுத்துத்தேர்வு பத்தாம் வகுப்பு கல்வித்தகுதியின் அடிப்படையில் அமைந்த பொதுஅறிவு சார்ந்ததாகும்.
- மேற்குறிப்பிட்ட எட்டு பதவிகளுக்கும் ஒரே ஒரு எழுத்துத்தேர்வு மட்டுமே நடத்தப்பெற உள்ளது.
- ஒரு நபர், ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பித்திருப்பினும், ஒரு தேர்வு மட்டுமே எழுத அனுமதிக்கப்பட்டு, அதற்கான நுழைவுச்சீட்டு அனுப்பப்படும்.
- ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பித்த நபர்களுக்கு, தனியர் எழுத்துத்தேர்வில் பெற்ற மதிப்பெண்கள், தனியர் விண்ணப்பித்த அனைத்து பதவிகளுக்கும் பொருந்தும்.

- எழுத்துத்தேர்வில் ஒவ்வொரு பதவிக்கும் இனசுழற்சியின் அடிப்படையில் அதிக மதிப்பெண் (Highest score) பெறும் நபர்கள் (ஒரு பணியிடத்திற்கு ஐந்து நபர்கள் வீதம்) நேர்காணலுக்கு அழைக்கப்படுவர்.
- அவ்வாறு நேர்காணலுக்கு அழைக்கப்படும் நபர்களுக்கு எழுத்துத்தேர்வில் பெற்ற மதிப்பெண்கள் (ம) நேர்காணலில் பெறும் மதிப்பெண்கள் ஆகிய இரண்டும் கணக்கில் கொள்ளப்பட்டு, அதிக மதிப்பெண் (Highest score) பெறுபவர்களுக்கு இனசுழற்சி அடிப்படையில் நிலைத் தேர்வு குழுவினரால் தேர்வு செய்யப்பட்டு பணிநியமனம் வழங்கப்படும்.
- எழுத்துத்தேர்வு நடைபெறும் பள்ளி குறித்த விவரங்கள் இத்துறையின் **http://www.stationeryprinting.tn.gov.in/** எனும் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளன.
- பார்வையற்ற மாற்றுத்திறனாளிகளுக்கு, தேர்வு எழுதுவதற்கு உதவியாளர்கள் (SCRIBE) ஏற்பாடு செய்யப்படும்.

இயக்குநர்.